இணைப்பு I.

(78 ம் பக்கத்தில் 249 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க)

1973–74ல் கரும்பின் மொத்தப் பரப்பு **1·49** லட்சம் ஹெக்டேர், வெல்ல உற்பத்தி **13·73** லட்சம் டன்னும், **135·95** லட்சம் டன் கரும்பும் ஆகும்.

1974–75ல் ஜனவரி **1975** முடிய கரும்பு சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு **1·004** லட்சம் ஹெக்டேர். நீர்ப்பாசன வசதி கரும்பு நடவிற்கு போதுமான அளவிற்கு உள்ள சிற்சில இடங்களில் மட்டுமே தற்சமயம் நடவு செய்யப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட இடங்களானது மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் கரும்பு சாகுபடி பரப்பில் **1974–75**ல் சென்ற ஆண்டைவிட **15** அல்லது **20** சதவிகிதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பரப்பின் மொத்த குறைவானது இடைப்பட்ட நடவு முடிந்த பிறகே முடிவெடுக்க முடியும்.

கரும்பு பரப்பின் குறைவுக்கு முக்கிய காரணங்களாவன —

1. முக்கியமாக இரு பருவக் காற்றுகளும் தவறியமையாலும், இதன் பயனாக கிணறுகளில் தண்ணீரானது மிகுந்த அளவு குறைந்து காணப்படுவதாலும் இருக்கும் தண்ணீரைக் கொண்டு இன்னும் **12** மாதங்களுக்கு கரும்பு பயிருக்கு முழுமையாக நீர்ப் பாய்ச்ச முடியாமல் இருப்பதால்;

2. குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் குறுகிய கால பயிர் களாகிய நெல், சிறு தானிய வகைகள், நிலக்கடலை முதலியவற்றின் சாகு படி செய்வதால் ;

3. கரும்பைவிட குறுகிய காலத்தில் நெல், சிறுதானியம், நிலக்கடலை ஆகிய பயிர்கள் அதிக லாபம் கொடுப்பதால்;

4. ஆலைகளில் இருந்து கரும்புக்கு கொடுக்கப்படும் விலை கரும்பு சாகு படிக்குத் தேவையான உரம் மற்றும் வேண்டியுள்ள சாதனங்கள் விலையை ஒப்பிடும் போது மிகவும் குறைவாக காணப்டுவதால், கரும்பு சாகு படியில் போதிய ஊக்கம் இல்லை.